உ

கடவுள் துணை

சங்கமருவிய செய்யுள்களுள் ஒன்றாகிய

பொய்கையார் அருளிச்செய்த

# களவழி நாற்பது

## மூலமும் உரையும்.

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 2.

[Copyright Registered.]

ஸ்ரீ

# முகவுரை.

களவழி நாற்பது என்பது சங்கநூற் றொகைகளாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பனவற்றுள் மூன்றாவதாகிய பதினெண்கீழ்க்கணக்கு என்பதிற் சேர்ந்தது. பதினெண்கீழ்க்கணக்கு என்பது பதினெட்டு நூற்களைக் குறிக்கும். அப்பதினெட்டு நூற்களாவன:—

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இனியவை நாற்பது
4. இன்னா நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணையைம்பது
8. ஐந்திணையெழுபது
9. திணைமொழியைம்பது
10. திணைமாலைநூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக்காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை என்பன.

இதனை,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மின்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு." என்பதனா லறியவும்.

மேற்கணக்கெனவும், கீழ்க்கணக்கெனவும் இருவகை நூற்றொகைக ளுண்டு. அவற்றுள், மேற்கணக்காவது - அடிவரையறையின் மிக்கனவாகிய வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப் பாக்களால் ஐம்பது முதல் ஐந்நூறு இறுதியான செய்யுட்களை யுடையதாகப்

பாடப்பெறுவது. கீழ்க்கணக்காவது - அடிவரையிற் குறைந்த வெண்பாவினாலும், சிறுபான்மை அவ்வகையான் வேறு செய்யுட்களாலும் அறம்பொருள் இன்பங்களைக் குறித்து அத்தொகைபடப் பாடப்பெறுவது. இவைகள் இங்ஙனம் வருதல் வேண்டுமென்பதை,

"மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படு வகையாற் பகர்ந்தனர் கொளலே" எனவும்,

"ஐம்பது முதலா வைந்நூ றீறு
ஐவகைப் பாவும் பொருணெறி மரபின்
தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்" எனவும்,

"வெள்ளைத் தொகையு மவ்வகை வேண்டின்
எள்ளா றீழ்க்கணக் கெனவுங் கொளலே" எனவும்,

"அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்" எனவும்

வரும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களால் அறிக.

களவழி நாற்பது என்னுந் தொடரின் இலக்கணமும், அப்பெயர்கொண்ட இந்நூலைப் பாடுதற்குரிய இலக்கணமும், இதனைப் பொய்கையார் என்னும் ஆசிரியர் பாடியதற்குரிய காரணமும் இந்நூலின் முகத்து இவ்வுரையாசிரியரால் கூறப்பட்டன.

இனி இந்நூலை யியற்றிய பொய்கையார் என்பவர் யாரெனின் ஆழ்வார்கள் பதின்மருள் முதலாழ்வார்கள் எனப்பெறும் பொய்கையார், பூதத்தார், பேயார் என்னு மூவருண் முதல்வராகிய பொய்கையாரே யாவர். ஆழ்வார்களில் ஒருவராகிய பொய்கையாரே களவழிபாடிய பொய்கையார் என்பதனை ம-ா-ா-ஸ்ரீ மு. இராகவ ஐயங்காரவர்கள் செந்தமிழ் முதலாந்தொகுதி, ஆரம்பகுதியில், 264-ம் பக்கமுதல் 273-ம்

பக்கம் வரையினும் பொய்கையார் என்னும் வியாசத்திற் பல தக்க காரணங்களோடு விளக்கி எழுதியிருக்கின்றனர். அது கொண்டு ஆழ்வார்களில் ஒருவராகிய பொய்கையாரே களவழி பாடிய பொய்கையார் என்பதனை நன்கு தெளிதலாகும்.

முற்கூறியவாற்றால் இவரது மதம் வைஷ்ணவம் என்பது நன்கு போதரும்.

இவரியற்றியன தமிழ்வேதமெனப்படும் நாலாயிரதிவ்விய பிரபந்தத்துள் மூன்றும் பகுதியாகிய இயற்பா என்னும் பகுதியிலுள்ள முதற்றிருவந்தாதியும், இக்களவழி நாற்பதும், பொய்கையார் நூல் என்னும் வேறொரு நூலும், புறநானூற்றிலுள்ள ௪௮-வது ௪௯-வது செய்யுட்களும், இன்னுஞ் சில தனிச்செய்யுட்களுமாகும். இவருடைய காலம் இவர் சோழன் செங்கணானைப் பாடியிருத்தலின் அவனுடைய காலமாகும். அவனுடைய காலத்தை "அவன் பெயர் முதலாங் கரிகாற்சோழனுக்குப் பின்னும், கி. பி. 890-ம் ஆண்டிற் பட்டமெய்திய விஜயாலய சோழனுக்கு முன்னுங் கூறப்பட்டுள்ளதெனவும், கரிகாலன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செழித்து விளங்கினன் என்பது தெளியப்படுதலால், சோழன் செங்கணானும் கி. பி. 2-ம் நூற்றாண்டிற்கும் 6-ம் நூற்றாண்டிற்கும் இடையில் இருந்தவனாதல் வேண்டுமெனவும் சரிதவாராய்ச்சி செய்யும் அறிஞர் கூறுவர்" என்று மேற்படி வியாசத்தில் மேற்படி ஐயங்காரவர்கள் கூறியிருத்தலால் அறிக. ஆழ்வார்களின் வைபவங்களைக் கூறுங் குருபரம்பரா ப்ரபாவத்தின்படி பொய்கையார் காலம் இன்னு மிகவு முற்பட்டதாகும்.

இனி, இக்களவழி நாற்பதுக்கு இவ்வுரை யியற்றியவர் சென்ற பத்தொன்பதா நூற்றாண்டிற் சிறந்து விளங்கிய பெரும் புலவர்களுள் ஒருவரும், நார்மல் காலேஜில் தமிழ்த் தலைமைப்புலமை நடத்தியவரும், மகாவித்துவான் மீனாக்ஷி

சுந்தரம்பிள்ளையவர்கள் மாணவருள் ஒருவருமாகிய சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்களாவர். இவர் பெரும்புலவரென்பதூம், திருவிளையாடன் முதலிய இன்னும் பல நூற்களுக்கு உரையியற்றியிருக்கின்றன ரென்பதும், அவரது உரையின் வன்மையும் யாவரு மறிந்தனவாகலின் அவற்றைப்பற்றி யான் ஈண்டு விரித்தல் மிகையாமென விடுத்தேன்.

இவ்வுரை இப்போது கிடைத்த லருமையா யிருப்பது பற்றி மீண்டும் அச்சிடப்பட்டது. இவ்வுரையை ஒப்புப் பார்த்தற்கண் முன் வெளியிடப்பட்டுள்ள புஸ்தகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்ததன்றி வேறொன்றுஞ் செய்திலேன். ஆயினும் இந்நூலின் இரண்டாஞ் செய்யுளாகிய 'ஞாட்பினு ளெஞ்சிய' என்னுஞ் செய்யுளின் விசேஷவுரையில், "கார்-இருமடியாகு பெயர், கார் என்னும் பண்பு மேகத்தை யுணர்த்திப் பண்பாகு பெயராகியும், அது காலத்தை யுணர்த்திக் காலவாகு பெயராகியும் நிற்றலால்" என்னுந் தொடரில் காலவாகுபெயர் என்பதொன்றனை மாத்திரம் பொருளாகுபெயர் என்று மாற்றினேன். இது இவ்வுரையாசிரியரவர்களின் கைத்தவறாயிருக்கும் என்பது எனது கருத்து. இம்மிகையை யுலகம் பொறுக்க. காலவாகுபெயர் என்பதே கருத்தெனத் தோன்றின் அறிஞர்கள் அதனை விளக்கமாகத் தெரிவிக்கக் கோருகின்றேன். அங்ஙனந் தெரிவிப்பார்க்கு யான் வணக்கமான வந்தனஞ் செலுத்துங் கடமையுடையேன்.

இங்ஙனம்,

☞ கா. ர. கோ.

கடவுள்துணை.

# களவழி நாற்பது

## மூலமும் உரையும்.

களத்தினிடத்து நிகழ்ந்த செய்தியை யுணர்த்தும் நாற்பது செய்யுளாலமைந்த நூல் என இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைக் களத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் இந்நூற்குக் காரணக் குறியாயிற்று. இது மூன்றுசொல் இரண்டு சந்தியாய் நிற்றலால் பன்மொழித்தொடர் என்றால் என்னையெனின்;—தொல்காப்பியம் எச்சவியலில் ஆசிரியர் "இருபெயர் பலபெய ரளவின் பெயரே" என உம்மைத்தொகைக்கே பன்மொழி விதித்தலின் சிறுபான்மை மற்றைத் தொகைகள் பல சொல்லாற் றொடரும் எனவும், தொகினு முன்னின்றன ஒருசொற்றன்மைப்பட்டுத் தொக்குப் பயனிலைகொண்டு முடியும் எனவுங்கூறிச் சேனாவரையர் "கற்சுனைக்குவளை யிதழ்" என உதாரணம் விதந்தோதினமையால் களம் என்பதும் இடவாகு பெயராகிய வழி என்பதும் ஒன்றியற்கிழமைப்பொருளாற் றொக்கு ஒரு சொல்லாய்ப் பின்பு பண்பாகுபெயராகிய நாற்பது என்னும் எய்தப்படுபொருளாற் றொக்குக் களவழி நாற்பது என நின்றதென் றறிக. இதனைப் பிரயோகவிவேகநூலார் சங்கியோத்தரபதவெகுவிரீ என்பர். களவழி நாற்பது என இந்நூற்குப் பெயர்வந்த தென்னையெனின்;—சோழன் செங்கணானும் சேரமான்கணைக் காலிரும்பொறையுந் தமது திருப்பெயர் பொறித்துப் பொருதுடைந்துழிச் சேர

மான்கணைக் காவிரும்பொறையைப்பற்றிச் சோழன் செங்கணான் சிறை வைத்துழிக் களம்பாடிப் பொய்கையார் வீடுகொண்டமையால் என்க. களம் பாடுதற்கு விதியாதெனில்;—தொல்காப்பியம் புறத்திணையியலில் "கூதிர் வேனி லென்றிரு பாசறைக், காதலி னொன்றிக் கண்ணிய மரபினும், ஒரோர் களவழி யன்றிக் களவழித்,தேரோர் தோற்றிய வென்றியும்" என்னும் உக - ஆம் சூத்திரத்தில் களவழி என்றமையாம். இதனை "அஞ்சவருதானை யமனென்னும் நீள்வயலுள்- வெஞ்சினம் வித்திப்புகழ் விளைக்கும் - செஞ்சுடர்வேற் - பைங்கட் பணைத்தாட் பகட்டுழவ னல்கலால்-எங்கட் கடையா விடர்" இச்செய்யுளால் அறிக.

---

## நூல்.

நாள் ஞாயிறுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத் - தாண்மாய்ந்து
முன்பக லெல்லாங் குழம்பாகிப் பின்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியா ரட்ட களத்து.

(இ-ள்) புனல் நாடன் - நீர்சூழ்ந்த நாட்டையுடைய செங்கட் சோழன், தப்பியார - பிழைத்தவரை, அட்ட - கொன்ற, களத்து - போர்க்களத்தில், நாள் ஞாயிறு - காலைப்பொழுதில், உற்ற-வந்தடைந்த, செருவிற்கு-போரில், வீழ்ந்தவர்-பட்டவருடைய, வாளமாய்-வாளழுந்துதலா லொழுகும, குருதி - உதிரத்தை, களிறு உழக்க - யானைகள் கலக்க, தாள் - (அவற்றின்) காலாலே, மாய்ந்து - சுருங்கி, முன்பகல் எல்லாம்-முற்பகற்பொழுதெல்லாம், குழம்பு ஆகி-சேறாகி, பின்பகல்-பின்பகற்பொழுதில், துப்பு துகளில் - பவளத் துகள்போல, கெழூஉம்-(ஆகாயமெங்கும) பரந்து செறியாநிற்கும். எ-று.

குருதிமாய்ந்து குழம்பாகிக் கெழூம் என முடிக்க. செருவிற் ந-உருபுமயக்கம். மாய்குருதி - காலங்கரந்த பெயரெச்சம் ஆதலால் காரணப்பொருளில்வந்தது. உழக்க - காரணப்பொருளில் வருதலால் இவ் வினையெச்சம் இறந்தகாலத்தின்மேல் நின்றது; உழ - பகுதி, கு - பிறவினைவிகுதி, ககரத்தோற்றம் சந்தி, அனைத்தும் ஒரு பகுதி, உகரக் கேடு சந்தி, அ-எச்சவிகுதி. இதனடியாக உழந்த, உழந்து, உழந்தான் என வினைவிகற்பங்கள் வரும். இல்-ஒப்புப்பொருட்டு கெழூம்-செய்யும் என்னும் பொதுவினைமுற்று. உயிரளபெடை இசைகெட்டவழி வந்தது. தப்பியார்-இறந்தகாலவினையாலணையும் பெயர்; தப்பு-பகுதி, இன்-இறந்தகாலவிடைநிலை, னகரம் - கடைக்குறை விகாரம், உகரக் கேடும் யகரத்தோற்றமும் சந்தி, ஆர்-பலர்பால் விகுதி அட்ட-இறந்த காலப் பெயரெச்சம்; அடு-பகுதி, முதனிலை யெழுத்தாய்த் தோன்றி நின்ற டகரம் இறந்தகால இடைநிலை, உகரக்கேடுசந்தி, அ-எச்சவிகுதி.

ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாடன்
ஆர்த்தம ரட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர் நாட்டையுடைய செங்கட்சோழன், ஆர்த்து - குணலையிட்டு, அமர் - போரில், அட்ட - கொன்ற, களத்து ஞாட்பின் உள் - போர்க்களத்தில், எஞ்சிய - ஒழிந்த, ஞாலம் சேர் - நிலத்திற்சேர்ந்த, யானை கீழ்-யானையின்கீழ் (கிடந்த), போர்ப்பு இல்-மேற்போர்வையில்லாத, இடி - இடிபோன்றொலிக்கும், முரசின் ஊடுபோம் - முரசத்தினூடுசெல்லும், ஒள் குருதி - ஒளிய உதிரம், கார்பெயல் பெய்தபின்-கார்ப்பருவம் மழைபெய்தபின்பு, செங்குளம்-செங்குளத்தினது, கோடு கீழ் - கரையின்கீழுள்ள, நீர்த்தூம்பு - நீர்த் தூம்பானது, நீர் உமிழ்வ - நீருமிழ்தலை, போன்றது - ஒத்தது, எ-று.

ஆர்த்து அட்ட எனமுடிக்க. ஆர்த்து-இறந்தகாலவினையெச்சம்; ஆர் - பகுதி, த்-சந்தி, த்-இடைநிலை, உ-எச்சவிகுதி. எஞ்சிய-இறந்தகாலப் பெயரெச்சம்; எஞ்சு - பகுதி, இன் - இறந்தகாலவிடைநிலை, னகரம் கடைக்குறை விகாரம், உகரக்கேடும் யகரத்தோற்றமும் சந்தி, அ - எச்சவிகுதி. போன்றது - இடைச்சொல்லடியாகப்பிறந்த அஃறிணை யொன்றன்பாற்படர்க்கை யிறந்தகால வினைமுற்று; போல் - இடைச்சொற்பகுதி, லகரம் னகரமாகத் திரிதல் சந்தி, ற்-இடைநிலை, அ-சாரியை, து-ஒன்றன்பால்விகுதி, விகுதி தொக்குநின்றது. பெயல்-தொழிலாகுபெயர். கார் - இருமடியாகுபெயர். கார் என்னும் பண்பு மேகத்தை யுணர்த்திப் பண்பாகுபெயராகியும், அது காலத்தை யுணர்த்திப் பொருளாகுபெயராகியும் நிற்றலால். (உ)

ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக் கோடூன்றி யெழுவர்
மழைக்குரன் மாமுரசின் மல்கு நீர்நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து.

(இ-ள்.) மழை குரல் - மேகத்தின் முழக்கம் (போன்ற), மா முரசின் - பெரிய முரசினையுடைய, மல்கு நீர் நாடன் - நிறைந்த நீர் நாட்டையுடையவன், பிழைத்தாரை - தப்பினவரை, அட்ட-கொன்ற, களத்து - போர்க்களத்தில், (அடைந்தாராகி) ஒழுக்கும் - (பட்டோர் உடலினின்று) ஒழுகும், குருதி உழக்கி - உதிரத்தைக் கலக்கி, தளர்வார் - (வழுக்கி) வீழ்வோருடைய, இழுக்கும்-(உதிரவெள்ளத்தால்) இழுக்கப்பட்ட, களிறு கோடு - யானையினது கொம்புகளை, ஊன்றி - ஊன்றுகோலாகக்கொண்டு, எழுவர் - எழாநிற்பர், எ-று.

ஒழுக்கும்-இறந்தகாலப் பெயரெச்சம்; ஒழுகு-பகுதி, க்-விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி, உம்-எச்சவிகுதி. இழுக்கும்-செயப்பாட்டு வினைப்படுவிகுதி குன்றிய இறந்தகாலப் பெயரெச்சம்; இழு - பகுதி, கு-சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, உம்-விகுதி. உழு

க்கி-இறந்தகாலப் பிறவினை வினையெச்சம்; உழ - பகுதி. க்-சந்தி, கு-பிறவினைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, உகரக்கேடு சந்தி, இ - எச்ச விகுதி, இவ்வெச்சம் தளர்வார் என்னும் வினைமுற்றுப் பெயரின் முதனிலையோடு முடிந்தது. ஊன்றி - செயப்படுபொருளில்வந்த தொழிற்பெயர்; ஊன்று - பகுதி, உகரக்கேடு சந்தி, இ - செயப்படுபொருளில்வந்த தொழிற்பெயர் விகுதி. (௩)

உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை - இருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து.

(இ-ள்.) செங்கண்மால் - செங்கட்சோழன், புல்லாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், உருவம் - அஞ்சத்தக்க, கடுந்தேர் - கடியதேரை, முருக்கி - சிதைத்து, அ தேர் பரிதி - அந்தத் தேரினுருளினை, சுமந்து எழுந்த யானை-சுமந்தெழுந்த யானைகள், இருவிசும்பில் - பெரிய ஆகாயத்தில், செல் சுடர் - செல்லுஞ் சூரியன், சேர்ந்த மலைபோன்ற - அடைந்த மலையையொத்தன, எ-று.

மால் - சோழன். யானை - பால்பகா அஃறிணைப்பெயர் ஆதலால் போன்ற என்னும் பலவின்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்றொடு முடிந்தது. போல் - பகுதி, லகரம் னகரமாகத் திரிதல் சந்தி, ற்-இடைநிலை, அ - பலவின்பாற்படர்க்கைவிகுதி; சாரியை பெற்றுவரில் போன்றன எனவரும். உருவம்: உரு-பகுதி, வ்-சந்தி, அம்-பகுதிப்பொருள் விகுதி. முருக்கி என்னும் இறந்தகால வினையெச்சம் சுமந்து என்னும் வினையெச்சத்தையும் அவ்வெச்சம் எழுந்த என்னும் பெயரெச்சத்தையும் கொள்ளுதலால் அடுக்கன்று. முருக்கு - பகுதி, உகரக்கேடு சந்தி, இ - எச்சவிகுதி. மற்று அசைநிலை. (௪)

நெரிகணை யெஃகந் திறந்தவா யெல்லாம்
குருதி படிந்துண்ட காகம் - உருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால்
தப்பியா ரட்ட களத்து.

(இ-ள்.) செங்கண் மால் - செங்கட்சோழன், தப்பியார் - பிழைத்தாரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், நெரி கணை - ஆராய்ந்த அம்புகளாலும், எஃகம் - வேல்களாலும், திறந்த - திறக்கப்பட்ட, எல்லாம் வாய் - எல்லாப் புண்களினது வாய்களினின்றும், குருதி படிந்து-(ஒழுகும்) உதிரத்திற்படிந்து, உண்ட காகம்-(அவ்வுதிரத்தை) உண்ட காகங்கள், உரு இழந்து-(தம்முடைய) நிறத்தை யிழந்து, குக்கில் புறத்த - செம்போத்தின் புறத்தையுடையவாகி, சிரல் வாய - சிச்சிலிக்குருவிபோன்ற வாயையுடையன, எ-று.

காகம் என்னும் வினைமுதல் இழந்து என்னும் எச்சத்தையும் அவ்வெச்சம் புறத்த என்னும் குறிப்புவினைமுற்றையும் அம்முற்று வினையெச்சமாய் வாய என்னுங் குறிப்புவினைமுற்றையுங் கொண்டன. இழ-பகுதி, ந்-சந்தி, த்-இறந்தகாலவிடைநிலை, உ - எச்சவிகுதி. படிந்து - இறந்தகால வினையெச்சம்; படி-பகுதி, ந்-சந்தி, த்-இடைநிலை, உ-எச்சவிகுதி. (௫)

நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
அடுக்குபு வேற்றிக் கிடந்த - இடித்துரறி
அங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் தூறெறிந் தற்றே யருமணிப்
பூணேந் தெழின்மார் பெற்றின்றேர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து.

(இ-ள்.) அரு மணி-(பெறுதற்கு) அரிய இரத்தினங்கள் (அழுத்திய), பூண் ஏந்து-ஆபரணம் அணிந்த, எழில் - தோற்றத்தையுடைய

மார்பு - மார்பையும், இயல் - (வேகம்) அமைந்த, திண் தேர் - வலிய தேரையுமுடைய, செம்பியன் - செங்கட்சோழன், தெவ் வேந்தரை - பகையரசரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், நால் நால் திசையும் - பல திசைகளிலும், பிணம் பிறங்க-பிணங்கள் மிக, யானை அடுக்குபு-யானைகளடுக்கப்பட்டு, எற்றிக்கிடந்த-உயர்ந்துகிடந்தன, இடித்து உரறி - இடித்து முழங்கி, அம் கண் - அழகிய இடத்தையுடைய, விசும்பின் - ஆகாயத்தினின்று, உரும் எறிந்து-இடிவீழ்ந்து, எங்கும்-எவ்விடத்துமுள்ள, பெரு மலை - பெரியமலைகளை, தூறு - தொடக்கு (அற), எறிந்தால் அற்று - எறிந்தாற்போலும், எ-று.

ஈறுகெட்டு னகரம் லகாரமாய்த் திரிந்துநின்ற நால்நால் என்னுந்தொடர்-ந-உயி-சக-கூ-உள்-"நெறியே" என்றமையில் அடங்குவதால் அடுக்கு அன்று; அல்வழிப்புணர்ச்சி பலவாதலால் சிறந்த பதினொன்கும் அல்லாத தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சியுளொன்று. பிறங்க - நிகழ்கால வினையெச்சம்; பிறங்கு - பகுதி, உகரக்கேடு சந்தி, அ - எச்சவிகுதி. அடுக்குபு - செயப்பாட்டுவினைப்படுவிகுதி தொக்க இறந்தகால வினையெச்சம்; அடுக்கு - பகுதி, பு - எச்சவிகுதி; இக்குற்றியலுகரவீறு வருமொழிமுதல் உயிர்வாக்கெடாது, பொதுவிதிபெற்று நிற்றல் ஷை ஷை கச - கூ - உள் கெடும் என்றொது ஒழிம் என்கிற இலேசால். உரறி-இறந்தகால வினையெச்சம்; உரறு - பகுதி, உகரக்கேடு சந்தி, இ - எச்சவிகுதி. எறிந்தாலற்று எறிந்தற்று தொகுத்தல்விகாரம். அற்று-உவமவுருபிடைச்சொல்லடியாகப் பிறந்த ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று; அன் - இடைச்சொற்பகுதி, னகரம் றகரமாகத் திரிதல் சந்தி, று - ஒன்றன்பாற் படர்க்கைவிகுதி. எழில்-தொழிற்பெயர்; எழு - பகுதி, உகரக்கேடு சந்தி, இல்-தொழிற்பெயர் விகுதி. (௬)

அஞ்சனக் குன்றேய்க்கும் யானை யமருழக்கி
இங்குலிகக் குன்றேபோற் றோன்றுஞ் - செங்கண்

வரிவரால் மீன்பிறழுங் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து.

(இ-ள்.) செம் கண் - செவந்த கண்களையும், வரி - வரிகளையுமுடைய, வரால்மீன் பிறழும்-வரால்மீன் பிறழாநிற்கும், காவிரி நாடன்-காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன், பொருநரை-(தன்னோடு) போர்செய்வாரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், அஞ்சனம் குன்று - நீலமலையை, ஏய்க்கும் - ஒத்துத்தோன்றும், யானை - யானைகள், அமர் உழக்கி - போரின்கட்கலக்கி, இங்குலிகம் குன்று போல் - சாதிலிங்க மலையைப்போல, தோன்றும் - தோன்றாநிற்கும், எ-று.

இங்குலிகம் - குலிகம் என முதற்குறையாகவும் வழங்கும். ஏய்க்கும் - உவமவுருபிடைச்சொல்லடியாகப் பிறந்த எதிர்காலப் பெயரெச்சம்; ஏய்-பகுதி, கு-சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, உம்-எச்சவிகுதி, சாரியையின்றி ஏயும் எனவும் வரும். பொருநர்-உயர்திணைப் பலர்பாற் படர்க்கை எதிர்கால வினைமுற்றாலணையும்பெயர்; பொரு-பகுதி, ந்-எதிர்காலவிடைநிலை, அர்-விகுதி. (எ)

யானைமேல் யானை நெரிதர வானாது
கண்ணோர் கடுங்கணை மெய்ம்மாய்ப்ப - எவ்வாயும்
எண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றனவே
பண்ணா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
நண்ணாரை யட்ட களத்து.

(இ - ள்.) பண் ஆர் - ஒப்பனையமைந்த, இடி முரசின் - இடிக்கு முரசையொப்ப, பாய் - பாய்ந்து செல்லும், புனல் நீர் நாடன்-காவிரி நீர்நாட்டையுடையோன், நண்ணாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், யானை மேல் யானை நெரிதர - யானைகள் மேல் யானைகள் சாய, ஆனாது - நீங்காமல், கண் நேர் - (பெண்கள்)

கண்களையொப்ப, கடும் கணை - கடிய அம்புகள், எ வாயும் - எவ்வுறுப் பின்கண்ணும் (பாய்ந்து), மெய் மாய்ப்ப-(அவற்றின்)உடலைமறைத்த லால் (அவை), எண் அரு-அளவில்லாத, குன்றில்-மலைகளில், குரீஇ இனம் - குருவியின் கூட்டங்களை, போன்றன - ஒத்தன, எ-று.

ஆனாது-எதிர்மறை வினையெச்சம்; ஆனா - பகுதி, து - சாரியை, உகரக்கேடு சந்தி, உ-எச்சவிகுதி. இவ்விகுதியே எதிர்மறைப் பொருள் தந்து நிற்றலால் உடன்பாட்டில் வருதலின்று. எதிர்மறைப் பெயரெச் சத்தில் ஆனாத எனவரும். மாய்ப்ப - காரணப்பொருளில் வருதலால் இறந்தகால வினையெச்சம்; இவ்வெச்சம் போன்றன என்னும் பலவின் பாற்படர்க்கை வினைமுற்றின் முதனிலையோடு முடிந்தது; மாய் - பகுதி, ப்-சந்தி, ப்-விரித்தல்விகாரம், அ-எச்சவிகுதி. ஆடூஉ, மகடூஉ என்றாற்போலக் குரீஇயென நிற்றலால் இயற்கையளபெடை. (அ)

மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
காலார் சோடற்ற கழற்கா லிருங்கடல்
ஊணில் சுறபிறழ்வ போன்ற புனனாடன்
நேராரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், நேராரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில, மேலோரை-(குதிரைமுதலாயினவற்றின்) மேலிருந்தவரை, கீழோர்-கீழ்நின்ற காலாள்கள், குறுகி-சென்றுசார்ந்து, குறைத்திட்ட - துணித்த, கால் ஆர் சோடு - காற்கிட்ட கவசத்தோடு, அற்ற - அறுபட்ட, கழல் கால்-வீரகண்டையணிந்த கால்கள், இரும் கடல்-பெரியகடலுள், ஊண் இல் - இரையில்லாத, சுற பிறழ்வ போன்ற-சுறாமீன்கள் பிறழ் தலையொத்தன, எ-று.

குறுகி என்னும் இறந்தகாலவினையெச்சம் குறைத்திட்ட என் னும் இறந்தகாலப் பெயரெச்சத்தையும் அவ்வெச்சம் கால் என்னும்

பெயர்ச்சொல்லையுங் கொண்டன; குறுகு - பகுதி, உகரக்கேடு சந்தி, இ-வினையெச்சவிகுதி. குறை-பகுதி, து-சாரியை, தகரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, இடு - பகுதிப்பொருள்விகுதி, அனைத்தும் ஒரு பகுதி, முதனிலை யெழுத்தாய்த் தோன்றிநின்ற டகரம் இடைநிலை, உகரக்கேடு சந்தி, அ - எச்சவிகுதி. ஊண் - முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். சுறா-சுற ஈற்று ஆகாரங் குறுகல். அதனோடு கெரமேற்றுச் சுறவு எனவும் வழங்கும். (௯)

பல்கணை யெவ்வாயும் பாய்தலிற் செல்கலா
தொல்கி யுயங்குங் களிறெல்லாம் - தொல்சிறப்பிற்
செவ்வலங் குன்றம்போற் றோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், தெவ்வரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், பல் கணை-பல அம்புகளும், எ வாயும் - எவ்வுறுப்பிலும், பாய்தலின் - பாய்தலால், செல்கலாது-செல்லமாட்டாது, ஒல்கி-தளர்ந்து, உயங்கும்-வருந்தும், களிறு எல்லாம் - யானைகளெல்லாம், தொல் சிறப்பின் - தொன்றுதொட்டுவருஞ் சிறப்பினையுடைய, செவ்வல் குன்றம்போல-மேருமலைபோல, தோன்றும் - தோன்றாநிற்கும், எ று.

செல்கலாது என்னும் எதிர்மறைவினையெச்சம் ஒல்கி என்னும் இறந்தகாலவினையெச்சத்தையும் அவ்வெச்சம் உயங்கும் என்னும் நிகழ்காலப்பெயரெச்சத்தையுங் கொண்டன; செல் - பகுதி, கு - அல் இரண்டும் சாரியைகள், உகரக்கேடு சந்தி, ஆ-எதிர்மறை விகுதி, அனைத்தும் ஒரு பகுதி, து-சாரியை, உகரக்கேடு சந்தி, உ-எச்சவிகுதி. உயங்கு-பகுதி, உகரக்கேடு சந்தி, உம் - எச்சவிகுதி. செவ்வல் - பண்புப்பெயர்; செம்மை-பகுதி, ஈறுகெடுதலும் மகரம் வகரமெய்யாகத் திரிதலும் வகரத்தோற்றமும் சந்தி; அல் - பண்புப்பெயர் விகுதி. இன் உருபு ஏதுப்பொருட்டு. (௧௦)

கழுமிய ஞாட்பினுண் மைந்திகந் தாரிட்ட
வொழிமுரச மொண்குருதி யாடித் - தொழின்மடிந்து
கண்காணா யானை யுதைப்ப விழுமெனா
மங்குன் மழையி னதிரு மதிராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து.

(இ-ள்) போர் - போரில், அதிரா - கலங்குதலில்லாத, செங்கண்மால் - செங்கட்சோழன், அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், கழுமிய-நெருங்கிய, ஞாட்பினுள் - போரில், மைந்து இகந்தார் - வலியிழந்தவர்கள், இட்ட-போகவிட்ட, ஒழி முரசம் - ஒழிந்தமுரசம், ஒள் குருதி-ஒள்ளியவுதிரத்தில், ஆடி-படிந்து, தொழில் மடிந்து-(தம்) தொழிலைத் தவிர்ந்து, கண் காணா - (ஆயுதங்களா லூறுபட்டு) கட்புலனிழந்த, யானை உதைப்ப - யானைகளுதைத்தலால், இழும் என - இழுமெனமுழங்கும், மங்குல் மழையின் - மேகம்போல, அதிரும் - முழங்காநிற்கும், எ-று.

ஆடி என்னும் இறந்தகாலவினையெச்சம் உதைப்ப என்னும் வினையெச்சத்தையும், அவ்வெச்சம் அதிரும் என்னும் பிறவினைமுதல் வினையையுங்கொண்டன. கழுமிய-இறந்தகாலப்பெயரெச்சம்; கழுமு-பகுதி, இன் - இறந்தகாலவிடைநிலை, இறுதியின் னகரம் கடைக்குறை, உகரக்கேடும் யகரத்தோற்றமும் சந்தி, அ - பெயரெச்சவிகுதி. உதைப்ப - காரணப்பொருள்மேல் நிற்றலால் இறந்தகாலத்தில்வந்த வினையெச்சம். இகந்தார் - இறந்தகாலவினையாலணையும் பெயர்; இக - பகுதி, ந்-சந்தி, த்-இறந்தகாலவிடைநிலை; ஆர்-விகுதி. மங்குல் மழை-ஒரு பொருண்மேல்வந்த பன்மொழியாதலால் சொல்லின்பந் தோன்ற நின்ற ஓர் மரபுவழுவமைதி. இன்உருபு ஒப்புப்பொருட்டு. (கக)

ஓவாக் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்

பூவலஞ் குன்றம் புயற்கேற்ற போன்றனவே
காவிரி நாடன் கடாய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து.

(இ-ள்.) காவிரி நாடன் - காவிரிநாட்டையுடைய செங்கட் சோழன், கடாய் - முயன்று, கடிது ஆக - விரைந்து, கூடாரை - பகைவரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், ஓவா - இடைவிடாமல், கணை பாய-அம்புகள் தைக்க, எழில் வேழம்-தோற்றத்தை யுடைய யானைகள், ஒல்கி - தளர்ந்து, தீவாய் - தீநிறம்பொருந்திய, குருதி இழிதலால் - உதிரத்தை யொழுக்குதலால், பூவலம் - பூமியின் கண்ணுள்ள, செம் தலை - செந்நிறமுள்ள சிகரத்தையுடைய, குன்றம் - செம்மண்மலைகள், புயற்கு ஏற்ற போன்றன - மழைக்கு எதிர்ந்தன ஒத்தன, எ-று.

செம்மண் மலையிற் பெய்தமழை செந்நீராக ஓடும் ஆதலால் உதிரம் ஒழுகவிடும் யானைகள் அம்மலைகளை யொக்கும் என்றார். ஓவா என்னும் எதிர்மறைவினையெச்சம் பாய என்னும் வினையெச்சத்தையும் அவ்வெச்சம் ஒல்கியென்னுங் காரியப்பொருட்டாய்நின்ற எச்சத்தையுங் கொண்டன; ஓவு - பகுதி, உகரக்கேடு சந்தி, ஆ - எதிர் மறைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, எச்சவிகுதி தொகுத்தல். பாய- காரணப்பொருள்மேல் நிற்றலால் இறந்தகாலத்தில் வந்தது. இழிதல்- முதனிலைதிரியாதுவந்த பிறவினைத் தொழிற்பெயர். கடாஅய் - இய வுயிரளபெடை இசைகெட்டவழி வந்தது; கடவு - பகுதி, ஈறு கெடுதல் சந்தி, ஈற்றகரம் ஆகாரமாகநீளல் விகாரம், ய் - இறந்தகால வினையெச்சவிகுதி. (கஉ)

நிரைகதிர் நீளெஃகம் நீட்டி வயவர்
வரைபுரை யானைக் கைநூற - வரைமேல்

உருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேஎய்பொரு தட்ட களத்து.

(இ-ள்.) செருமொய்ம்பின் - போர்வலிமையையுடைய, சேய்-செங்கட்சோழன், பொருது அட்ட-போர்செய்து கொன்ற, களத்து - போர்க்களத்தில், நிரை கதிர் - நிரைந்த வொளியினையுடைய, நீள் எஃகம் - நீண்ட வாளை, நீட்டி - பின்னேவாங்கி, வயவர் - வீரர்கள், வரை புரை-மலையையொத்த, யானை கை-யானைகளது கைகளை, நூற-துண்டுபடுத்த, வரைமேல் - யானையின்மேல், உருமெறி - இடிவிழுந்த, பாம்பின் - பாம்பைப்போல, புரளும் - புரளாநிற்கும், எ-று.

நீட்டி: பிறவினை வினையெச்சம் ஆதலால் பின்வாங்கி எனப் பொருள் கொண்டது; இவ்வெச்சம் நூற என்னும் நிகழ்கால வினையெச்சத்தையும் அவ்வெச்சம் புரளும் என்னும் பிறவினைமுதல்வினையாய் நின்ற பெயரெச்சத்தையுங் கொண்டன; நீள் - பகுதி, டு - பிறவினை விகுதி, ளகரம் டகரமாகத் திரிதல் சந்தி, அனைத்தும் ஒரு பகுதி. உகரக்கேடு சந்தி, இ - எச்சவிகுதி. நூற: நூறு பகுதி, உகரக்கேடு சந்தி, அ-எச்சவிகுதி. பொருது - இறந்தகாலவினையெச்சம்; பொரு-பகுதி, த்-இறந்தகாலவிடைநிலை, உ -எச்சவிகுதி. வயவர்: வயம்-பகுதி, ஈறு கெடுதலும் வகரத்தோற்றமும் சந்தி, அர் பலர்பால்விகுதி. வரை - பலவளத்தையுங் கொள்ளுதலுடையது எனப் பொருள்படுதலால் முதனிலைத் தொழிலாகுபெயர். சேஎய் - இசைகேட்ட வழிவந்த உயிரளபெடை. (கரு)

கவளங்கொள் யானையின் கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற் - றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், கொங்கரை - கொங்குநாட்டரசரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், கவளம் கொள் - கவளத்தைக்கொள்ளும், யானை கை-யானைகள் (தம்) துதிக்கைகள், துணிக்கப்பட்டு - துண்டுபடுத்தப்பட்டு, பவளம் சொரிதரு - பவளத்தைச் சொரியாநின்ற, பைபோல் - பையைப்போல, திகழ் ஒளிய - விளங்கும் ஒளியையுடைய, ஒள் - ஒள்ளிய, செம் குருதி - செவந்த உதிரத்தை, உமிழும் - உமிழாநிற்கும், எ-று.

இன்-வேண்டாவழிச்சாரியை. கை என்னும் வினைமுதலின் பயனிலையாய்நின்ற துணிக்கப்பட்டு என்னும் செயப்பாட்டுவினை யிறந்தகால வினையெச்சத்தின் தம்மினுகிய தொழில் உமிழும் என்னும் பெயரெச்சத்தையும் அவ்வெச்சம் எல்லைப்பொருட்டாகிய நாடன் என்னுங் குறிப்புவினைமுற்றின் முதனிலையையுங்கொண்டன. துணிக்கப்பட்டு: துணி-பகுதி, கு-அ-இரண்டுஞ் சாரியைகள்; ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, படு-செயப்பாட்டுவினைவிகுதி, பகரத்தோற்றம் சந்தி, அனைத்தும் ஒருபகுதி, முதனிலை எழுத்தாய்த் தோன்றிநின்ற டகரம்இடைநிலை, உகரக்கேடு சந்தி, உ-எச்சவிகுதி. போல்-அகரவீறு தொகுத்தல். (கச)

கொல்யானை பாயக் குடைமுருக்கி யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத் - தசசன்
வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து.

(இ-ள்.) சினம் - கோபத்தையுடைய, செங்கண்மால் - செங்கட்சோழன், பொருத களத்து - போர்செய்த போர்க்களத்தில், எ வாயும் - எவ்விடத்தும், குடை முருக்கி - குடைகளையழித்து, கொல் யானை - கொல்லும் யானைகள், பாய - பாய்தலால், புக்க வாய் எல்லாம் (அவ் யானைகள்) புகுந்த இடமெல்லாம், பிணம் பிறங்க-பிணங்கள் விளங்க,

தச்சன் - தச்சனால், வினைபடு-வினைசெய்யப்பட்ட, பள்ளியில் தோன்றும் - இடங்கள்போலத் தோன்றாநிற்கும், எ-று.

பாய - இவ்வினையெச்சம் காரணப்பொருளில் வருதலால் இறந்த காலத்தின்மேல்நின்றது. பிறவுக: பிறங்கு - பகுதி, உகரக்கேடு சந்தி, அ-எச்சவிகுதி. முருங்கி-இறந்தகால வினையெச்சம்; முருக்கு-பகுதி, உகரக்கேடு சந்தி, இ-எச்சவிகுதி, இவ்வெச்சம் பாய என்னும் வினையெச்சத்தின் முதனிலையோடு முடிந்தது. தச்சன் - பண்புபற்றி வந்த காரணப்பெயர்; தச்சு-பகுதி, உகரகேடு சந்தி, அன்-விகுதி (௧௫)

பரும வினமாக் கடவித் தெரிமறவர்
ஊக்கி யெடுத்த வரவத்தினார்ப் பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், வேந்தரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், பருமம்-கல்லணையையுடைய, இனம் மா-திரண்ட குதிரைகளை, தெரி மறவர் - ஆராய்ந்தவீரரால், கடவி - நடத்தப்பட்டு, ஊக்கி எடுத்த-வீராவேசங்கொண்டு (போரின்கண்) எடுத்த, அரவத்தின் ஆர்ப்பு-(தமது) ஆரவாரத்தை, அஞ்சா-அஞ்சாத, குஞ்சரம்-யானையினது, கும்பத்து - மத்தகத்தில், பாய்வன - பாயாநின்றன (அப் பாய்த்துள்), குன்று இவரும் - மலையின்கட் பாய்கின்ற, வேங்கை இரும்புலி - வேங்கைப் பெரும்புலியின் (பாய்த்துலை), போன்ற - ஒத்தன, எ-று.

கடவி என்னும் படுவிகுதி குன்றிய இறந்தகாலச் செயப்பாட்டு வினையெச்சம் பாய்வன என்னும் வினைமுற்றின் முதனிலையையும், அவ்வினைமுற்றினின்று பிரிந்த தொழிற்பெயர் வினைமுதலாய்ப் போ

ன்ற என்னும் வினைமுற்றுப் பயனிலையையுங் கொண்டன; கடவு- பகுதி, உகரக்கேடு சந்தி, இ-இறந்தகால வினையெச்சவிகுதி. (கசு)

ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா ளெதிர்த்தோடித்
தாக்கி யெறிதர வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே
போர்க்கொடித் தானைப் பொருபுன னீர்நாடன்
ஆர்த்தம ரட்ட களத்து.

(இ-ள்.) போர் - போரில் (வல்ல), கொடி தானை - கொடிப் படையையும், பொரு - (கரையொடு) மோதும், புனல் நீர் நாடன் - காவிரி நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், ஆர்த்து - கொக்கரித்து, அமர் - போரில், அட்ட-(பகைவரைக்) கொன்ற, களத்து - களத்தில், ஆர்ப்பு எழுந்த - ஆரவாரமிகுந்த, ஞாட்பினுள் - போரில், ஆள் ஆள் - ஆளும் ஆளும், எதிர்த்து ஓடி-எதிர்சென்றோடி, தாக்கி - பொருது, எறிதர-(ஆயுதங்களை) வீசுதலால், வீழ்தரும் - சொரியாநின்ற, ஒள் குருதி-ஒள்ளியவுதிரம், கார்த்திகை சாறு இல் - கார்த்திகைவிழாவில், கழி விளக்கை - மிக்கவிளக்கினை, போன்றன-ஒத்தன, எ-று.

தாக்கி-இறந்தகால வினையெச்சம்; தாக்கு- பகுதி, உகரக்கேடு சந்தி, இ-எச்சவிகுதி. எறிதர-காரணப்பொருளில் வருதலால் இறந்த கால வினையெச்சம். எறிதரு;பகுதி, உகரக்கேடு சந்தி, அ-எச்சவிகுதி, எறிதரு ஒருசொன்னீர்மைத்து. ஆர்த்து-இறந்தகால வினையெச்சம்; ஆர்-பகுதி, த்-சந்தி, த்-இறந்தகாலவிடைநிலை, உ-எச்சவிகுதி. (கஎ)

நளிந்த கடலுட் டிமிறிரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்கும் - தெளிந்து
தடற்றிடங் கொள்வாட் டளையவிழுந் தார்ச்சேய்
உடற்றியா ரட்ட களத்து.

(இ-ள்.) தெளிந்து விளங்கி, தடறு-உறையினது, இடம் கொள்-இடத்தலடங்கும், வாள் - வாளையும், தளை அவிழும் - கட்டவிழ்ந்த, தார் - மாலையையுமுடைய, சேய் - இளமைப்பருவத்தையுடைய செங்கட்சோழன், உடற்றியார் - (தன்னைக்) கோபிக்கச் செய்தவரை, அட்ட - கொன்ற, களத்து - போர்க்களத்தில், நளிந்த - அகன்ற, கடலுள் - கடலில், திமில் - தோணியையும், திரை - அலையையும், போல்-போல, எங்கும் விளிந்தார் - எவ்விடத்தும் பட்டவருடைய, பிணம் - பிணக்குப்பையை, குருதி ஈர்க்கும்-உதிரவெள்ளம் இழுத்துநிற்கும், எ-று.

நளிந்த-உரிச்சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்; நளி - பகுதி, ந் - சந்தி, த் - இறந்தகாலவிடைநிலை, அ - எச்சவிகுதி. திரை-வினைமுதற்பொருளில்வந்த இகர விகுதியோடு புணர்ந்து குன்றிய தொழிற்பெயர்; செயப்படுபொருளில் வந்ததெனினும் அமையும். விளிந்தார் - இறந்தகால வினையாலணையும் பெயர்; விளி - பகுதி, ந் - சந்தி, த் - இறந்தகாலவிடைநிலை, ஆர் - விகுதி. ஈர்க்கும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; ஈர் - பகுதி, கு - சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, உம் - முற்றுவிகுதி. தடற்றிடம் - ஒற்றுமைக்கிழமைப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். உடற்றியார் - இறந்தகாலப் பிறவினை வினையாலணையும்பெயர்; உடல் - பகுதி, லகரம் றகரமாகத்திரிதல் சந்தி, று - பிறவினைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, இன் - இறந்தகாலவிடைநிலை, ஈற்று னகரம் கடைக்குறை, பகுதியீற் றுகரக்கேடும் யகாரதோற்றமும் சந்தி, ஆர்-விகுதி. (கஅ)

இடைமருப்பின் விட்டெறிந்த வெஃகங்கான் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோற்றி - நடைமெலிந்து
முக்கோட்ட போன்றகளி றெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து.

(இ-ள்.) நீர் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், அமர் புக்கு-போரிற்புகுந்து, அட்ட களத்து - (பகைவரைக்) கொன்ற போர்க்களத்தில், மருப்பின் இடை - (யானைகளின்) கொம்பினடுவே, விட்டு எறிந்த எஃகம் - விட்டெறிந்தவேலின், கால்மூழ்கி - காம்பு குளித்தலால், கடைமணி - (அவ்வேலின்) கடைமணி, காண்வர - விளங்க, களிறு எல்லாம் - யானைகளெல்லாம், தோற்றி - தோன்றி, நடை மெலிந்து-நடைதளர்ந்து, முக்கோட்ட போன்ற - மூன்றுகொம்புகளையுடைய யானைகளை யொத்தன, எ-று.

மூழ்கி - காரணப்பொருளில்வந்த இறந்தகால வினையெச்சம். கடைமணி-உருபும்பயனும் உடன்றொக்க எழாமவேற்றுமைத தொகை நிலைத்தொடர். தோற்றி - தன்வினை வினையெச்சம்; தோன்று-பகுதி, னகரம் றகரமாதல் வலித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி, இ-எச்ச விகுதி. முக்கோட்ட - சினையடியாகப்பிறந்த பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும்பெயர்; முக்கோடு - பகுதி, டகரத்தோற்றமும் உகாரக்கேடுஞ் சந்தி, அ-விகுதி; முக்கோடு-ஒருசொன்னீர்மைத்து.

இருசிறகு ஈர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்றம் - திரவிலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாடன்
நேராரை யட்ட களத்து.

(இ-ள்) புனல்நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், நேரார் - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், எருவை - கழுகுகள், இரு சிறகர் - இரண்டு சிறகின்கண்ணுமுள்ள, ஈர்க்கு பரப்பி - ஈர்க்குகளைப் பரப்பி, குருதி - உதிரத்தோடு, பிணம் கவரும் - பிணங்களைக் கொள்ளைகொள்ளும், தோற்றம்-காட்சி, திரவு இலா - கலக்கமில்லாத, சீர் - ஓசையையுடைய, முழா - முழவினை, பண் அமைப்பான் - பண்ணமைப்பவனை, போன்ற - ஒத்தன, எ-று.

சிறகு சிறகர் இறுதிநிலைப்போலி. தோற்றம் - தொழிற்பெயர்; தோன்று - பகுதி, மெல்லெழுத்து வல்லெழுத்தாதல் விகாரம், உகரக் கேடு சந்தி, அம் - தொழிற்பெயர் விகுதி. முழா : முழவு என உகரச் சாரியை பெற்றும் வரும். (உ.0)

இணைவேல் எழின்மருமத் திங்கப் புண்கூர்ந்து
கணைபலக் கொல்கிய யானை - துணையிலவாய்த்
தொல்வலி யாற்றித் துளங்கினவாய் மெல்ல
நிலங்கால் கவருமலை போன்ற செங்கட்
சினமால் பொருத களத்து.

(இ-ள்.) சினம் - கோபத்தையுடைய, செங்கண்மால் - செங்கட் சோழன், பொருத களத்து - போர்செய்த போர்க்களத்தில். இணைவேல் - இணைத்தவேல்கள், எழில் மருமத்து - அழகியமார்பில், இங்க - அழுந்துத லால், புண் கூர்ந்து - புண்மிகுந்து கணை அலைக்க - அம்பினலைப்புக ளால், ஒல்கிய யானை - தளர்ந்த யானைகள், துணை இலவாய் - (தம்மேற் கொண்ட) துணைவரையிலவாய், தொல் வலி - பண்டைவலியினின்று, ஆற்றி - நீங்கி, துளங்கின ஆய் - நடுங்கி, மெல்ல - மெல்ல, நிலம் - நிலத்தை, கால்கவரும் - காலாலே யகப்படுக்கும், மலைபோன்ற - மலை யையொத்தன, எ-று.

இங்க - காரணப்பொருளில் வருதலால் இறந்தகாலத்தின்மேல் நின்ற வினையெச்சம்; இங்கு-பகுதி, உகரக்கேடு சந்தி, அ - எச்சவிகுதி, இது திசைச்சொல்லடியாக வந்தது. அலை - முதனிலைத் தொழிற்பெ யர். கு - உருபுமயக்கம் துணை - பண்பாகுபெயர். தொல்வலியாற்றி - நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ()

இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆடியல் யானைத் தடக்கை யொளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத் துணிந்தவை

கோடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்குமே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

(இ-ள்.) பாடு ஆர் - ஒலிநிறைந்த, இடி - இடிபோன்ற, முரசின் - முரசினையுடைய, பாய்புனல் நீர்நாடன் - பாய்ந்து செல்லுங் காவிரிநீர் நாட்டையுடைய செங்கட்சோழன், கூடாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், ஒளிறு வாள் - விளங்கும வாளையேந்திய, ஓடா மறவர் - புறங்கொடாத வீரர்கள், துணிப்ப - துண்டுபடுத்த, துணிந்தவை - துண்டுபட்டனவாகி, இரு நிலம் - பெரியநிலத்தில், சேர்ந்த - விழுந்துகிடந்த, குடை கீழ் - குடையின்கீழ் (கிடந்த), வரி நுதல் - வரிபொருந்திய நெற்றியையுடைய, ஆடு இயல் - வெற்றிசேர்ந்த, யானை தடம் கை - யானையினது நீண்டகைகள், கோடு கொள் - கலைநிறைந்த, ஒள் மதியை - ஒள்ளிய சந்திரனை, நக்கும் - தீண்டும், பாம்பு ஒக்கும் - பாம்பினையொக்கும், எ-று.

துணிந்தவை என்னும் வினைமுற்று எச்சமாய் இசையெச்சமாய் நின்ற கிடந்த என்னும் பெயரெச்சத்தையும், அவ்வெச்சம் கை என்னும் பெயரையுங் கொண்டன. முரசின் நீர்நாடன் எனக்கொண்டு இரண்டாமுருபும்பயனுந்தொக்க தழாநிலைத்தொடர் என்க. பாய்புனல் - இடைப்பிறவரல். ஒக்கும் - உவமவுருபிடைச்சொல்லடியாகப் பிறந்த செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; ஒ - பகுதி, கு - சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, உம் - முற்றுவிகுதி. (௨௨)

எற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து
நெய்த்தோர்ப் புனலு ணிவந்த களிற்றுடம்பு
செக்கர்கொள் வானிற் கருங்கொண்மூப் போன்றவே
கொற்ற வேற்றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன்
செற்றாரை யட்ட களத்து.

(இ-ள்.) கொற்றம் - வெற்றியையுடைய, வேல்-வேலையேந்திய, தானை-சேனையையும், கொடி திண் தேர்-கொடிகட்டிய வலியதேரையு முடைய, செம்பியன் - செங்கட்சோழன், செற்றாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், வயவர் எற்றி எறிய - வீரர்கள் எடுத்து எறிதலால், நுதல் பிளந்து - நெற்றிபிளந்து, நெய்த் தோர் புனலுள் - உதிரநீருள், நிவந்த-எழுந்த-வெழுந்த, களிறு உடம்பு - யானையினது உடல், செக்கர்கொள் வானில் - செக்கர்வானத்தில், கரு கொண்மூ - கரியமேகத்தை, போன்ற - ஒத்தன, எ-று.

களிற்றுடம்பு - எழுவாய், போன்ற பயனிலை. எற்றி - இறந்தகால வினையெச்சம்; எற்று-பகுதி, உகரக்கேடு சந்தி, இ-எச்சவிகுதி. நிவந்த- இறந்தகாலவினையெச்சம்; நிவ-பகுதி, ந் - சந்தி, த் - இறந்தகாலவிடை நிலை, அ - எச்சவிகுதி. செக்கர்: செ - பகுதி, கு - சாரியை, ககரத் தோற்றமும் உகரக்கேடும் சந்தி, அர் - பகுதிப்பொருள் விகுதி; இது செம்மையென்னும் பண்பின்மேல் நின்றது. செற்றார் - இறந்தகால வினையாலணையும் பெயர்; செறு - பகுதி, முதனிலையெழுத்தாய்த் தோன்றிநின்ற றகரம் இறந்தகாலவிடைநிலை, உகரக்கேடு சந்தி, ஆர் - பலர்பால் விகுதி. களிற்றுடம்பு - ஒற்றுமைக்கிழமைப் பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். (உங)

திண்டோண் மறவ ரெறியத் திசைதோறும்
பைந்தலை பாரிற் புரள்பவை - நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண்ணார் கமழ்தெரியற் காவிரிநீர் நாடன்
நண்ணாரை யட்ட களத்து.

(இ-ள்.) கண் ஆர் - கண்ணுக்கு நிறைந்த (காட்சியையுடைய), கமழ் தெரியல் - வாசனை வீசும் மாலையை (அணிந்த), காவிரிநீர் நாடன் - காவிரிநீர் நாட்டையுடைய செங்கட்சோழன், நண்ணாரை-பகை வரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், திண் தோள் -

வலியதோளையுடைய, மறவர் - வீரர்கள், எறிய - எறிதலால், திசை தோறும் - திசைகள்தோறும், பாரில் - பூமியில், புரள்பவை - புரளும், பைந்தலை - பசியதலைகள், நன்கு எனைத்தும் - மிகவும், பெண்ணை தோட்டம் - பனங்காட்டில், பெரு வளி - பெருங்காற்று, புக்கது அற்று - புககசெயலையொத்தன, எ - று.

மறவர்-காரணப்பெயர்; மறம்-பகுதி, மகரக்கேடும் வகரத்தோற்றமும் சந்தி, அர்-பலர்பால்விகுதி. பார் - முதனிலைத்தொழிலாகுபெயர்; பர - பகுதி, முதனீளுதலும் அகரந்தொகுதலும் விகாரம். விழுதக்கு வீழ் என நிற்றலும் காண்க. வளி - வண்மையைத் தருதலையுடையது என்னும் பொருள்மேல் நிற்றலால் காரணப்பெயர்; வண்மை - பகுதி, ஈறுகெடுதல் சந்தி, இ - உடையதென்னும் பொருளில் வந்த விகுதி. புரள்பவையென்னும் பலவின்பாற்படர்க்கை வினைமுற்று, பெயரெச்சத்தின்மேல்நின்றது. அம் - சாரியை. பெண்ணைத்தோட்டம் - உருபும்பயனுந்தொக்க இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இது மிகுதிபற்றி வந்தது. பசுமை: கருமைமேல் நின்றது. (உசு)

மலைகலங்கப் பாயு மலைபோ னிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக் கொடியெழுந்து - பொங்குபு
வானந் துடைப்பன போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(இ - ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், மேவாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், மலை கலங்க - மலைகள் கலங்க, பாயும் - பாயாநின்ற, மலைபோல் - (வேறு) மலைகள்போல, நிலைகொள்ளா - நிலைகொண்டு, குஞ்சரம் பாய - (பகைவர் யானைகள் கலங்க) யானைகள் பாய்தலால், கொடி எழுந்து-(அவற்றின்) கொடிகள் மேலெழுந்து, பொங்குபு-விளங்கி(துவள்தல்), வானம் - வானத்தில் (உள்ளதுகளை), துடைப்பன போன்று - துடைக்குஞ்செயலையொத்தன, எ - று.

மலை: பலவளங்களையும் தரித்தலுடையது என்னும் பொருள்மேல் நிற்றலால் முதனிலைத் தொழிலாகுபெயர். மலைதல் - சூடுதல். கொள்ளா, பொங்குபு - இறந்தகால வினையெச்சங்கள்; கொள் - பகுதி, ள் - சந்தி, ஆ-எச்சவிகுதி. பொங்கு - பகுதி, பு - எச்சவிகுதி, துவன்றல் - இசையெச்சம். (உ௫)

எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவல்
ஐவாய் வயநாகங் கவ்வி விசும்பிவரும்
செவ்வா யுவணத்திற் றோன்றும் புனனாடன்
தெவ்வரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், தெவ்வரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், எ வாயும் ஓடி - எவ்விடத்தும் சென்று, வயவர் - வீரர்கள், துணித்திட்ட - துணித்த, கை - கைகளை, வாயில்-(தமது) வாயில், கொண்டு எழுந்த-(கவ்விக்கொண்டு) மேலெழுந்த, செம் செவி - சிவந்த செவிகளையுடைய, புல் சேவல்-புல்லிய பருந்தின் சேவல்கள், ஐ வாய் - ஐந்து வாயையுடைய, வயம் நாகம் கவ்வி - வலியையுடைய பாம்பைக்கவ்வி, விசும்பு இவரும் - ஆகாயத்திற் பறந்துசெல்லும், செ வாய் - சிவந்த வாயையுடைய, உவணத்தில்-கருடனைப்போல, தோன்றும்-தோன்றா நிற்கும், எ - று.

இல் உருபு இரண்டனுள் முன்னது இடப்பொருட்டு, பின்னது ஒப்புப்பொருட்டு. வயவர் - காரணப்பெயர்; வயம் - பகுதி, மகரக் கேடும் வகரத்தோற்றமுஞ் சந்தி, அர்-பலர்பால்விகுதி. கவ்வி - இறந்த கால வினையெச்சம்; கவ் - பகுதி, வ் - சந்தி, இ-எச்சவிகுதி. இவரும்- எதிர்காலப் பெயரெச்சம்; இவர் - பகுதி, உம் - எச்சவிகுதி. உம்மை: முற்று. (உ௬)

செஞ்சேற்றுட் செல்யானை சீறி மிதித்தலால்
ஒண்செங் குருதிக டொக்கீண்டி நின்றவை
பூநீர் வியன்ற மிடாப்போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், மேவாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில் செம் சேறுள்-(உதிரத்தாற் சேறுபட்ட) செஞ்சேற்றில், செல் யானை-செல்லுகின்ற யானைகள், சீறி மிதித்தலால் - கோபித்து மிதித்தலால் (குழிந்த இடங்களில்), தொக்கு ஈண்டி - தொக்கு நெருங்கி, நின்ற வை - நின்ற, ஒள் - ஒள்ளிய, செம் குருதிகள் - செவந்தவுதிரங்கள், பூ வியன்ற-செவந்த பூக்களையாக்கிய, நீர்மிடா-நீர்மிடாவை, போன்ற-ஒத்தன, எ - று.

குழிந்த இடம் - இசையெச்சம். நின்றவை என்னும் பலவின் பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்றுக்கொண்டு முடிந்த குருதி என்னும் பொருட்பெயர்ச்சொல் அதன் பயனிலையாய் நில்லாது போன்ற என்பதற்கு வினைமுதலாய் நிற்றலால் இது பெயரெச்சப் பொருள்மேல்நின்றது. வியன்ற - இறந்தகாலப்பெயரெச்சம்; வியல்-பகுதி, லகரம் னகரமாகத் திரிதல் சந்தி, ற்-இடைநிலை, அ-விகுதி. ()

ஓடா மறவ ருருத்துமதஞ் செருக்கிப்
பீடுடை வாளார் பிறங்கிய ஞாட்பினுள்
கேடகத்தோ டற்ற தடக்கைகள்கொண் டோடி
இகலன்வாய்த் துற்றிய தோற்ற மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் றோன்றும் புனனாடன்
நண்ணாரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், நண்ணாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில்

ஓடா மறவர் - புறங்கொடாத வீரர்கள், உருத்து - கோபித்து, மதம் செருக்கி - களிப்பால் மிகுந்து, பீடு உடை - பெருமையையுடைய, வாளார் - வாளேந்தினவராய், பிறங்கிய - போர்செய்த, ஞாட்பினுள் - போரில், கேடகத்தோடு அற்ற - கேடகத்தோடறுபட்ட, தடம் கைகள் - நீண்ட கைகளை, கொண்டு ஓடி - கொண்டுசென்று, இகலன் - ஓரிகள், வாய் துற்றிய - (தமது) வாயிற் கவ்விய, தோற்றம் - காட்சி, அயலார்க்கு - அயலில் நின்றவர்க்கு, கண்ணுடி காண்பாரில் - கண்ணுடி காட்டுவாரைப்போல, தோன்றும் - தோன்றுநிற்கும், எ-று.

உருத்து, செருக்கி - இறந்தகால வினையெச்சங்கள்; உரு - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகாலவிடைநிலை, உ - எச்சவிகுதி. செருக்கு - பகுதி, உகரக்கேடு சந்தி, இ - எச்சவிகுதி. வாளார் - பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று எச்சமாய்நின்றது; பிறங்கிய - இறந்தகாலப் பெயரெச்சம்; பிறங்கு - பகுதி, உகரக்கேடு - சந்தி, இன் - இறந்தகால விடைநிலை, னகரமெய் கடைக்குறை, யகரமெய் சந்தி, அ - எச்ச விகுதி. துற்றிய - இறந்தகாலப் பெயரெச்சம்; துற்று - பகுதி, உகரக் கேடு சந்தி, இன் - இறந்தகாலவிடைநிலை, னகரம் கடைக்குறை, யகரத்தோற்றம் சந்தி, அ - பெயரெச்சவிகுதி. காண்பார் - முதனிலை திரியாது வந்த பிறவினைவினையாலணையும் பெயர். இல் - ஒப்புப் பொருட்டு. (உஅ)

கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு
வீற்று வீற்றோடு மயிலினம்போல் - நாற்றிசையும்
கேளி ரிழந்தா ரலறுபவே செங்கட்
சினமால் பொருத களத்து.

(இ-ள்.) சினம் - கோபத்தையுடைய, மால் - செங்கட்சோழன், பொருத களத்து - போர்செய்த போர்க்களத்தில், கடி காவில் - (இருள்) மிகுந்த சோலையில், காற்று உற்று எறிய - காற்று அதிகரித்து வீசுதலால், வெடிபட்டு - அஞ்சி, வீற்று வீற்று ஓடும் - இனம் இனமாக ஓடும்,

மயில் இனம்போல் - மயிற்கூட்டம்போல், நால் திசையும் - நான்கு திசையிலும், கேளிர் இழந்தார்-கொழுநரையிழந்த பெண்கள், அலறுப- அலறாநிற்பர், எ-று.

கேளிர் - காரணப்பெயர்; கேள் - பகுதி, இர் - பலர்பால் விகுதி. அலறுப - பலர்பாற்படர்க்கை வினைமுற்று. (உக)

மடங்க வெறிந்து மலையுருட்டு நீர்போல்
தடங்கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கும்
மடங்கன் மறமொய்ம்பிற செங்கட் சினமால்
அடங்காரை யட்ட களத்து.

(இ - ள்.) மடங்கு அல் - மடங்குதலல்லாத, மறம் - வலிய, மொய்ம்பின் - மார்பினையுர், செம் கண் - செவந்த கண்ணினையும், சினம்-கோபத்தையுமுடைய, மால் - செங்கட்சோழன், அடங்காரை- பகைவரை, அட்ட களத்து - கொன்றபோர்க்களத்தில், மலை மடங்க எறிந்து - மலைகள் மறிய எறிந்து, உருட்டும் நீர்போல் - (அம்மலைகளை) உருட்டுகின்ற வெள்ளத்தைப்போல, தடம் கொண்ட - பரந்த, ஒள் குருதி - ஒள்ளிய உதிரவெள்ளம், கொல் களிறு - கொல்லப்பட்ட யானைகளை, ஈர்க்கும் - இழுத்துச் செல்லாநிற்கும், எ - று.

மடங்கல்மறம்மொய்ம்பின் என்பதற்குச் சிங்கம்போலும் வீரமும் வலியுமுடைய எனப் பொருள்கொள்ளினும் அமையும். உருட்டும் - பிறவினைப்பெயரெச்சம்; உருள் - பகுதி, டு - பிறவினை விகுதி, ளகரம் டகரமாகத் திரிதல் சந்தி, அனைத்தும் ஒருபகுதி, உகரக்கேடு சந்தி; உம - எச்சவிகுதி, ஈர்க்கும் - செய்யும் என்னும் பொதுவினைமுற்று, ஈர் - பகுதி, கு - சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, உம் - விகுதி. (உ௦)

ஓடா மறவ ரெறிய நுதல்பிளந்த
கோடேந்து கொல்களிற்றுக் கும்பத் - தெழிலோடை

மின்னுக் கொடியின் மிளிரும் புனனாடன்
ஒன்னாரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், ஒன்னாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், ஓடா மறவர் - புறங்கொடாத வீரர்கள், எறிய - (படைகளை) வழங்குதலால், நுதல் பிளந்த - நெற்றிபிளந்த, கோடு ஏந்து - கொம்பினையேந்திய, கொல் களிறு - கொல்லும் யானையினது, கும்பத்து - மத்தகத்தில் (கட்டிய), எழில் ஓடை - அழகியபட்டம், மின்னு கொடியில் - மின்னற்கொடிபோல, மிளிரும் - விளங்காநிற்கும், எ - று.

நுதல் என்னும் வினைமுதலின் பயனிலையாய்நின்ற பிளந்த என்னும் இறந்தகாலப்பெயரெச்சம் குஞ்சரம் என்னும் பிறபெயர் கொண்டது. கும்பத்து ஓடை - ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். எழில் - இடைப்பிறவரல். (௩௧)

மையின் மாமேனி நிலமென்னு நல்லவள்
செய்யது போர்த்தாள்போற் செவ்வந்தாள் - பொய்தீர்ந்த
பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காய்ந்தாரை யட்ட களத்து.

(இ-ள்.) பூ தார் - பூமாலையினையும், முரசின் - வெற்றிமுரசினையுமுடைய, பொய் தீர்ந்த-வறத்தலில்லாத, பொரு - (கரையொடு) மோதும், புனல் நீர்நாடன் - காவிரி நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், காய்ந்தாரை - வருத்தும் பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், மை இல் - குற்றமில்லாத, மா மேனி - அழகிய மேனியையுடைய, நிலம் என்னும் நல்லவள் - பூமி என்னுமாது, செய்யது - சிவந்த போர்வையை, போர்த்தாள்போல் - போர்த்தவள்போல, செவ்வந்தாள் - செவந்தாள், எ - று.

போர்த்தாள் என்றதனால் இன்னது எனப் புலப்படுதலின் 'செய்யது' என்றார். செய்யது - குறிப்புவினையாலணையும் பெயர்; செம்மை - பகுதி, ஈறு கெடுதலும் மகரமெய் திரிதலும் சந்தி, அகரஞ் சாரியை; து - ஒன்றன்பால் விகுதி. செவ்வந்தாள் : வகரமெய் விரித்தல் விகாரம்; செவ் - பகுதி. காய்ந்தார் - இறந்தகால வினையாலணையும்பெயர்; காய் - பகுதி, ந் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, ஆர் - பலர்பால் விகுதி. (௩௨)

பொய்கை யுடைந்து புனல்பாய்ந்த வாயெல்லாம்
நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோல்
ஐதிலங் கெஃகி னவிரொளிவா ளாயினவே
கொய்சுவன் மாவிற் கொடித்திண்டேர்ச் செம்பியன்
தெவ்வரை யட்ட களத்து.

(இ-ள்.) கொய்-கத்திரிக்க, சுவல் - புறமயிரையுடைய, மாவின் - குதிரையினையும், கொடி - கொடிகட்டிய, திண் தேர் - வலிய தேரினையுமுடைய, செம்பியன் - செங்கட்சோழன் தெவ்வரை-பகைவரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், பொய்கை உடைந்து-பொய்கைக்கரை யுடைதலால், புனல் பாய்ந்த - (அதன்கண்ணுள்ள) நீர்பரந்த, வாய் எல்லாம் - இடமெல்லாம், நெய்தல் - (மலர்ந்த) நெய்தற்பூக்களின், இடை இடை - நடுவே நடுவே, வாளை பிறழ்வனபோல் - வாளைமீன் பிறழ்தல்போல, ஐது இலங்கு - அழகிதாய் விளங்குகின்ற, எஃகின் - வேல்களோடு, அவிர் ஒளி - விளங்கும் ஒளியையுடைய, வாள் தாயின - வாள் பரந்தன, எ - று.

ஐது - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று எச்சமாய் இலங்கு என்னும் காலங்கரந்த பெயரெச்சங் கொண்டது; ஐ - பகுதி, து - ஒன்றன்பால்விகுதி. தாயின - அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை இறந்தகால வினைமுற்று; தாவு - பகுதி, இன் -

இடைநிலை, வுகரக்கேடும் யகரத்தோற்றமும் சந்தி, அ - பலவின்பால் விகுதி. (௩௩)

இணரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெஃக மெறியச்சோர்ந் துக்க
குடர்கொண்டு வாங்குங் குறுநரி கந்திற்
றொடரொடு கோணாய்ப் புரையுமடர் பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து.

(இ - ள்.) அடர் - தகட்டுவடிவாகிய, பைம்பூண் - பசிய ஆபரணத்தையணிந்த, சேய் - செங்கட்சோழன், பொருது அட்ட - போர்செய்துகொன்ற, களத்து - போர்க்களத்தில், இணரிய ஞாட்பினுள் - தொடர்ந்து நெருங்கிய போரில், ஏற்று எழுந்த - எதிர்த்தெழுந்த, மைந்தர் - வீரர்கள், சுடர் இலங்கு - ஒளிவிளங்காநின்ற, எஃகம் எறிய - வேல்களை யெறிதலால், சோர்ந்து உக்க - சரிந்துசிந்திய (வீரர்களது), குடர்கொண்டு - குடர்களைக் கவ்விக்கொண்டு, வாங்கும் - இழுக்கும், குறு நரி - குறுநரிகள், கந்தில் - கட்டுத்தறியில் (கட்டப்பட்ட), தொடரொடு - சங்கிலியோடு (நின்ற), கோணாய்ப் புரையும் - கோணாய்களை யொக்கும், எ - று.

மைந்தர் - காரணப்பெயர்; மைந்து - பகுதி, உகரக்கேடு சந்தி, அர் - பலர்பால்விகுதி; மைந்து - வன்மை. இணரிய - இறந்தகாலப் பெயரெச்சம்; இணர் - பகுதி, இன்-இடைநிலை, னகரம் கடைக்குறை, யகரமெய் சந்தி, அ - எச்சவிகுதி. குடல் - குடர் இறுதிநிலைப்போலி.

செவ்வரைச் சென்னி யரிமானோ டவ்வரை
யொல்கி யுருமிற் குடைந்தற்றான் - மல்கிக்
கரைகொன் றிழிதரூஉங் காவிரி நாடன்
உரைசா லுடம்பிடி மூழ்க வரசோ
டரசுவா வீழ்ந்த களத்து.

(இ-ள்) செம்வரை - செம்மலையினது, சென்னி-உச்சியிலுள்ள, அரிமானோடு - சிங்கத்தோடு, அ வரை - அந்தமலை, ஒல்கி - தளர்ந்து, உருமிற்கு - இடியேற்றிற்கு, உடைந்தால் அற்று - அழிந்தாற்போல, மல்கி - மிகுந்து, கரை கொன்று - கரைகளையழித்து, இழிதரும் - செல்லும், காவிரி நாடன் - காவிரிநாட்டையுடைய செங்கட்சோழன், உரைசால் - புகழமைந்த, உடம்பிடி மூழ்க-வேல்கள்குளிப்ப, களத்து - போர்க்களத்தில், அரசோடு - அரசரோடு, உவா - (பட்டம்பெற்ற) யானைகள், வீழ்ந்த - வீழ்ந்தன, எ-று.

மல்கி என்னும் இறந்தகாலவினையெச்சம் கொன்று என்னும் இறந்தகாலவினையெச்சத்தையும், அவ்வெச்சம் இழிதரும் என்னும் பெயரெச்சத்தையும், அவ்வெச்சம் காவிரி என்னும் பெயரையும் கொண்டன. மல்கு-பகுதி, உகரக்கேடு சந்தி, இ-எச்சவிகுதி; இழிதா-பகுதி, குறுகலும் ரகரவுகரம் விரிதலும் விகாரம். உடைந்தால்-தொகுத்தல் விகாரம். (௩௫)

ஓஓ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநான்
மாவுதைப்ப மாற்றார் குடைபெலாங் கீழ்மேலாய்
ஆவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(இ-ள்.) காவிரிநாடன் - செங்கட்சோழன், கழுமலம் - கழுமல மென்னும் ஊரினை, கொண்ட நாள் - கைக்கொண்டநாளில், புனல் நாடன் - அச்செங்கட்சோழன், மேவாரை-பகைவரை, அட்ட களத்து- கொன்ற போர்க்களத்தில், மா உதைப்ப - குதிரைகளுதைத்தலால், மாற்றார் - பகைவர்களது, குடை எல்லாம் - குடைகளெல்லாம், கீழ் மேல் ஆய்-கீழ்மேலாகி, ஆ உதை-பசுக்களாலுதைக்கப்பட்ட, காளாம்பி போன்ற - காளாம்பியையொத்தன, உவமன் - அவ்வுவமை, ஓ - சிறப்

புடைத்தாக, உறழ்வு இன்றி - மாறுபாடில்லாமல், ஒத்தது - பொருந்தியது, எ-று.

ஓ - சிறப்புப் பொருளில்வந்த இடைச்சொல் உதை-செயப்பாட்டு வினைப்படுவிகுதி குன்றிய காலங்கரந்த பெயரெச்சம் புனல்நாடன், உவமன் இவற்றின் முதலில் அகரச்சுட்டுத் தொகுத்தல். (௧௬)

அரசர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு
முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப - எத்திசையும்
பௌவம் புணரம்பி போன்ற புனனாடன்
தெவ்வரை யட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், தெவ்வரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், அரசர் பிணம் - அரசராகிய பிணங்கள், கான்ற - சிந்திய, நெய்த்தோர் - உதிரவெள்ளங்கள், எ திசையும் - எல்லாத் திசைகளினின்றும், முரசொடு - முரசினோடு, முத்து உடை - முத்தினையுடைய, கோட்ட - கொம்புகளையுடைய, களிறு - யானைகளை, ஈர்ப்ப - இழுப்பன (அவ்வெள்ளமும் அதனால் இழுக்கப்படும் யானைகளும்), பௌவம் - கடலையும், புணர்-(அக்கடலைச்) சேர்ந்த, அம்பி-மரக்கலங்களையும், போன்ற - ஒத்தன, எ - று.

"படுமகன் கிடக்கைகாணூஉ" என்றாற்போல அரசர் பிணம் என நின்றது. கான்ற - இறந்தகாலப் பெயரெச்சம்; கால் - பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, ற் - இடைநிலை, அ - எச்சவிகுதி. கோட்ட - வினையடியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம்; கோடு - பகுதி, டகரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, அ - எச்சவிகுதி, ஈர்ப்ப - பலவின்பாற் படர்க்கை எதிர்கால வினைமுற்று; ஈர் - பகுதி, ப்-சந்தி, ப்-இடைநிலை, அ முற்றுவிகுதி. (௧௭)

பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்
துருமெறி பாம்பிற் புரளும் - செருமொய்ம்பிற்
பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன்
துன்னாரை யட்ட களத்து.

(இ-ள்.) செரு மொய்ம்பின் - போர்வலிமையினையும், பொன் ஆரம் - பொன்னாற்செய்த ஆரத்தையணிந்த, மார்பின் - மார்பினையும், புனை கழல் கால் - கட்டிய வீரகண்டையையுடைய காலினையுமுடைய, செம்பியன் - செங்கட்சோழன், துன்னாரை - பகைவரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், பருமம் - பண்ணினையும், பணை - பருத்த, எருத்தின்-பிடரினையுமுடைய, பல் யானை - பலயானைகள், புண் கூர்ந்து - (படைகளால்) புண்மிகுதலால், உரும் எறி - இடியேற்றுலெறியப்பட்ட, பாம்பின் - பாம்புபோல, புரளும் - புரளாநிற்கும், எ - று.

துன்னார் - எதிர்மறை வினையாலணையும்பெயர்; துன்-பகுதி, ஆ- எதிர்மறைவிகுதி, ன் - சந்தி, அனைத்தும் ஒரு பகுதி, ஆர் - பலர்பால் விகுதி, விகுதியின் ஆ - முதற்குறை. கூர்ந்து - காரணப்பொருளில் வந்த உரிச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகால வினையெச்சம்; கூர் - பகுதி, ந் - சந்தி, த் - இடைநிலை, உ - எச்சவிகுதி. இன் - ஒப்புப் பொருட்டு. (௩அ)

மைந்து கால்யாத்து மயங்கிய ஞாட்பினுள்
புய்ந்து காலபோகிப் புலான்முகந்த வெண்குடை
பஞ்சிபெய் தாலமே போன்ற புனனாடன்
வஞ்சிக்கோ வட்ட களத்து.

(இ-ள்.) புனல் நாடன் - நீர் நாட்டையுடைய செங்கட்சோழன், வஞ்சி கோ-வஞ்சியரசனாகியசேரனை, அட்ட களத்து-கொன்ற போர்க் களத்து, மைந்து - (வீரர்கள் தங்கள்) மறவலிகள், கால் யாத்து-காலைத்

தலை செய்தலால், மயங்கிய - போகாது மிடைந்த, ஞாட்பினுள் - அப்போர்க்களத்தில், கால் புய்ந்துபோகி-காம்பு பறித்துப்போதலால், புலால் முகந்த - செந்தசையை முகந்த, வெண்குடை-வெள்ளைக்குடைகள், பஞ்சி பெய்த - செம்பஞ்சுக்குழம்பு பெய்த, ஆலம் ஏ போன்ற - ஆலத்தையே யொத்தன, எ - று.

யாத்து என்னும் இறந்தகால வினையெச்சம் மயங்கிய என்னும் பெயரெச்சத்தையும், புய்ந்து என்னும் இறந்தகால வினையெச்சம் போகி என்னும் வினையெச்சத்தையுங் கொண்டன. யா - பகுதி, த் - சந்தி, த் - இடைநிலை, உ - எச்சவிகுதி. புய்ந்து புய் - பகுதி, ந்-சந்தி, த் - இடைநிலை, உ - எச்சவிகுதி. பெய்த - அகரவீறு தொக்குநின்ற பெயரெச்சம்; பெய்-பகுதி. (௩௯)

வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோல்
எல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த - பல்வேற்
பணைமுழங்கு போர்த்தானைச் செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து.

(இ-ள்.) பல் வேல் - பலகாலும், பணை முழங்கு - முரச முழங்கா நின்ற, போர் தானை - போர்ச்சேனையையும், சினம் - கோபத்தையுமுடைய, செங்கண்மால் - செங்கட்சோழன், கணை மாரி - அம்புமழை, பெய்த களத்து - பெய்த போர்க்களத்தில், வெள்ளி - வெள்ளியாற் செய்த, வெள் நாஞ்சிலால் - வெள்ளிய கலப்பையால், ஞாலம் உழுவன போல் - நிலத்தை யுழுதல்போல, களிறு எல்லாம் - யானைகளெல்லாம், நிலம் சேர்ந்த - (முகங் கவிழ்ந்து) நிலத்தைச் சேர்ந்தன, எ-று.

வேலை: வேல் ஈறு தொகுத்தல். ஆல்: கருவிப்பொருட்டு. லகரம் னகரமாகத் திரிதல் ந - மெ - உசு - சூ - இல். "மெலிமேவினணவும்" என்றதனால். (௪௦)

வேனிறத் திங்க வயவரா லேறுண்டு
காணிலங் கொள்ளாக் கலங்கிச் செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றவே
பாடா ரிடிமுரசிற் பாய்புனனீர் நாடன்
கூடாரை யட்ட களத்து.

(இ - ள்.) பாடு ஆர் - ஒலிநிறைந்த, இடி - இடியேறுபோன்ற, முரசின் - முரசினையுடைய, பாய் - பாய்ந்துசெல்லும், புனல் நீர் நாடன்-காவிரி நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், கூடாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், வேல்-வேலானது, நிறத்து இங்க - மார்பிலழுந்த, வயவரால் - வீரரால், ஏறுண்டு - குத்தப்பட்டு, கால் நிலம் கொள்ளாது - கால்கள் தளர்ந்து, கலங்கி - வீழ்ந்து, செவி சாய்த்து - செவிகளைச் சாய்த்து (யானைகள் கிடத்தல்), மாநிலம் - பெரிய நிலமகள், கூறும் - உபதேசிக்கும், மறை - உபதேசமொழியை, கேட்ப போன்ற - கேட்டலையொத்தன, எ - று.

கொள்ளா - ஈறுதொக்க எதிர்மறை வினையெச்சம். (சக)

## களவழி நாற்பது மூலமும் உரையும்

## முற்றிற்று.

சிவமயம்.

# களவழி நாற்பதின்

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ | |
| அஞ்சனக் | 7 |
| அரசர் | 31 |
| ஆ | |
| ஆர்ப்பெழுந்த | 16 |
| இ | |
| இடைமருப்பின் | 17 |
| இணரிய | 29 |
| இருசிறக | 18 |
| இருநிலஞ் | 19 |
| இணைவே | 19 |
| உ | |
| உருவக்கடுங் | 5 |
| எ | |
| எவ்வாயு | 23 |
| எற்றிவயவ | 20 |
| ஒ | |
| ஒழுக்குங் | 4 |
| ஓ | |
| ஓஓஉவம | 30 |
| ஓடாமறவ | 24 |
| ஓடாமறவரெறி | 26 |
| ஓவாக்கணை | 11 |
| க | |
| கடிகாவிற் | 25 |
| கவளங்கொள் | 13 |
| கழுமிய | 11 |
| கொ | |
| கொல்யானை | 14 |
| செ | |
| செஞ்சேற்றுட் | 24 |
| செவ்வரைச் | 29 |
| ஞா | |
| ஞாட்பினு | 3 |
| தி | |
| திண்டோன் | 21 |
| தெ | |
| தெரிகணை | 6 |
| நா | |
| நானாற்றிசை | 6 |
| நான்ஞாயி | 2 |
| நி | |
| நிரைகதிர் | 12 |
| ப | |
| பருமவினை | 15 |
| பருமப்பணை | 32 |
| பல்கணை | 10 |
| பொ | |
| பொய்கை | 28 |
| ம | |
| மடங்க | 26 |
| மலைகலங்க | 22 |
| மே | |
| மேலோரை | 9 |
| மை | |
| மையின் | 27 |
| மைந்து | 32 |
| யா | |
| யானைமேல் | 8 |
| வெ | |
| வெள்ளி | 33 |
| வே | |
| வேனிறத் | 34 |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீவிருத்திப்பிரபாகரம்:—*விசாரசாகர நூலாசிரியராகிய சாது ஸ்ரீநிச்சலதாஸரவர்கள் ஹிந்திபாஷையி லியற்றிய அரிய வேதாந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு வசனம்* | 4 | 0 | 0 |
| பஞ்சதசப்பிரகரணம்:—*சதுர்வேதபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள் அருளிச்செய்த இந்நூல் தமிழில் வினாவிடைரூபமாக எழுதப்பட்டுள்ளது* ... | 1 | 0 | 0 |
| சூதசம்ஹிதை [*செய்யுள்*]:—*இதில் பிரமகீதையும் சூத கீதையும் அடங்கியுள்ளன* ... ... ... | 1 | 8 | 0 |
| அகம்புற ஆராய்ச்சி விளக்கம்:—*வேதாந்த சாஸ்திரத் தின் பல அரிய விஷயங்களைத் தமிழில் வசனரூபமாகத் திரட்டி ஸ்ரீமத் சச்சிதாநந்தசுவாமிகள் மாணாக்கர் ஒருவர் இயற்றிய அரிய நூல் [நூலாசிரியர் படத்துடன்]* .. | 1 | 4 | 0 |
| ஸ்ரீபகவத்கீதை:—*ஸ்ரீமத் பொன்னம்பலசுவாமிக ளியற்றிய கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன்* ... | 2 | 0 | 0 |
| பிரபோதசந்த்ரோதய வசனம் :—*அல்லது மெய்ஞ்ஞான விளக்கம்* ... ... ... ... | 1 | 0 | 0 |
| பிரபுலிங்கலீலை வசனம்:—*நூதனமாய்த் தமிழில் வசனப் படுத்தப்பட்ட அரிய நூல்* ... ... ... | 0 | 12 | 0 |
| ஒழிவிலொடுக்கம்:—*சிதம்பரசுவாமிகள் உரையுடன்* ... | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் தேவாரத்திரட்டு:—*மூலமும் உரையும்* ... | 0 | 12 | 0 |
| ஸ்ரீவிவேகாநந்த விஜயம்:—*விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங் கத்திரட்டும் [சுவாமிகள் படத்துடன்]* ... ... | 1 | 4 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்:—*ஸ்ரீ விவேகா நந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும் [பரமஹம்சர் படத்துடன்]* ... ... ... | 1 | 4 | 0 |
| பச்சையப்ப முதலியார் சரித்திரம் : (*தென் இந்தியாவில் பிரக்யாதிபெற்ற கோடீசுவரராகிய இத்தர்மப்பிரபுவின் சரித்திரமும் படமும், அவர்மீது பலவித்வான்கள் பாடிய பாடல்களும், கீர்த்தனங்களும்*)... ... ... | 0 | 10 | 0 |